**C.O.S. No. 1/2025**
**Date : 12.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 2 **திரு. முருகேசன்**

**குறுக்கு விசாரணை :**

1. பிரதிவாதிக்கு விற்பனை செய்ததாக சொல்லப்படும் சோயா பீன்ஸ் எங்கிருந்து யார் மூலம் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்குத் தெரிந்து இது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் நான் பார்த்ததில்லை. வாதியே இந்த ஆவணங்களை பராமரித்து கொள்வார். இந்த வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. மேலாளர் என்ற வகையில் எனது பணிகள் என்ன என்றால் வாதி சொல்லும் வேலைகளை நான் செய்வேன். அவர் பில் போட சொன்னால் நான் பில் போடுவேன். அவர் சொல்லித்தான் நான் இன்று நீதிமன்றத்தின் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். சோயா பீன்ஸ் வாங்கியது தொடர்பான விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வாதிக்கு தெரியும். வழக்கு சம்பந்தமான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும்.

3. சோயா பீன்ஸ் கேட்டு யார் அணுகினார்கள் என்றால் ஒரு ரெப்ரசென்டேட்டிவ் அணுகினார். ஒரு விசிட்டிங் கார்டு எடுத்து வந்தார், அந்த விசிட்டிங் கார்டில் போஷ்வாணி என்ற பெயர் இருந்தது. அவர் பெயர் ஞாபகம் இல்லை. நான் உடனே வாதிக்கு தகவல் சொன்னேன். சோயா பீன்ஸ் எவ்வளவு இருந்தாலும் எடுத்துக் கொள்வதாக சொன்னார். 14.3.2023ம் தேதியன்று அவ்வாறு அந்த ரெப்ரசென்டேட்டிவ் வந்தார். அவருக்கு எங்களிடம் சோயாபீன்ஸ் இருக்கும் விவரம் அவருக்கு எப்படி தெரியும் என்றால் ஆன்லைனில் பரிசோதனை செய்து விட்டு வந்திருக்கலாம். அதற்கு முன்பு நான்

அவர்களை பார்த்தது கிடையாது, பிரதிவாதி நிறுவனத்துடன் எங்களுக்கு தொடர்பு அதற்கு முன்பு கிடையாது என்றால் சரிதான்.

4. வாதி சொன்னதன் பெயரில் நான் பில் போட்டு கொடுத்தேன். எனக்கு பொருள் சென்றடைந்ததோ என்ற விபரமோ, பணம் கொடுத்தார்களா என்ற விபரமோ எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் பிரதிவாதியின் நபர்கள் யாரும் என்னை வந்து சந்திக்கவில்லை என்றும், வழக்குக்காக வாதி சொன்னதன் அடிப்படையில் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. 14.03.2023 ஆம் தேதியன்று மதியம் பிரதிவாதியின் நபர் வந்தார்,. 15 ஆம் தேதி சரக்குகள் அனுப்பப்பட்டது. இன்வாய்ஸ் 14 ம் தேதி போட்டோம். எனக்கு பணம் எதுவும் பிரதிவாதி கொடுக்கவில்லை. 15 ஆம் தேதி வங்கி மூலம் பகுதி பணம் அனுப்பி வைக்கப்பட்டது. வாதி பிரதிவாதி நிறுவனத்துடன் போனில் பேசிக்கொண்டு உறுதி செய்த பின்னர்தான் சரக்குகளை அனுப்பி வைத்தார். நான் கூறும் சங்கதிகள் சாத்தியம் கிடையாது என்றும், வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.12 18:22:55 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.